(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 8(3).]

# பாராளுமன்றம்

## 8ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2013 மே 03 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா.185/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல

கௌரவ தயாசிறி ஜயசேகர

கௌரவ டி.எம். சுவாமிநாதன்

கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன

கௌரவ ஜெ. ஸ்ரீ ரங்கா

கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க

கௌரவ பாலித தெவரப்பெரும

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ அகில விராஜ் காரியவசம்

கௌரவ ரன்ஜன் ராமநாயக்க

கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார ஜயசிங்க

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ ருவன் விஜேவர்தன

கௌரவ ஆர். யோகராஜன்,— மின்வலு, எரிசக்தி அமைச்சர் கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி அவர்கள் மீது நம்பிக்கையின்மை,—

மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பாக எதிர்க்கட்சி முதற்கோலாசான், கௌரவ ஜோன் அமரதுங்க அவர்களால் 2013 ஏப்பிறல் 23ஆம் திகதி எழுப்பப்பட்ட வினாவிற்கு மின்வலு, எரிசக்தி அமைச்சர் கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி அவர்கள் பதிலளிக்கும் வேளையில் அண்மைக்கால மின்கட்டண அதிகரிப்பை அமுல்படுத்தல் தொடர்பான முன்மொழிவு, தனது தற்போதைய பதவியில் கடமைகளைத் தான் பொறுப்பேற்க முன்னரே, பதவியில் முன் இருந்தவரான கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க அவர்களினால் கொண்டுவரப்பிட்டிருந்தது என உறுதியாகக் கூறியுள்ளதாலும்;

தொழில்நுட்ப, ஆராய்ச்சி மற்றும் அணுசக்தி தொடர்பான தற்போதைய அமைச்சர் கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க அவர்கள் 2013 ஏப்பிறல் 24ஆம் திகதி வழங்கிய கூற்றில் மின்கட்டண அதிகரிப்பு பற்றி விசேடமாக யாதேனும் கடப்பாடு தொடர்பாகக் கூற மறுத்துவிட்டதாலும்;.

உண்மையில், கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி அவர்கள் அவரது கூற்றை ஆதாரப்படுத்திச் சான்றுதலளிக்கும் அளவிற்கு கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க அவர்கள் சவால் விடுத்துள்ளதாலும்;

இதனால், மின்வலு, எரிசக்தி அமைச்சர் சபையை வேண்டுமென்றே தவறாக வழிநடாத்திச் சென்றுள்ளதோடு, இச்சபை மற்றும் அதன் அனைத்து உறுப்பினர்களினதும் சிறப்புரிமையை மீறிய குற்றச்சாட்டிற்கும் ஆளாகியுள்ளார் என்பது தெளிவாகின்றதாலும்;

எனவே, கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி அவர்கள், மின்வலு, எரிசக்தி அமைச்சராக தொடர்ந்தும் பதவி வகிப்பது தொடர்பில் அவர் மீது ஏதேனும் நம்பிக்கையைக் கொண்டிருக்கவில்லை என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.